# திராவிடத்தால் வாழ்கிறோம்

1133

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

105

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**



ஓவியம் : சிகரன்

## காட்டிக் கொடுப்பது யார் வேலை?

12.08.1936 அன்று, ‘நாமக்கல் ஜில்லா ஜஸ்டிஸ் மாநாடு’ பிரமாண்ட ஊர்வலத்துடன் நடைபெற்றது. நாமக்கல் நகரம் முழுவதும் தட்டிகள், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இரவில் அன்றைய காங்கிரசார் அவற்றைப் பிடுங்கி எறிவதும், நீதிக்கட்சியினர் பின்னாலேயே சென்று அவற்றைத் திரும்ப வைப்பதுமாக இருந்தனர். காலை 9 மணிக்கு டிராவல்ஸ் பங்களாவில் இருந்து, மாநாட்டுப் பந்தல் நோக்கி பேரணி புறப்பட்டது. பந்தலில், சேலம் ஜெகதீசன் நீதிக்கட்சியின் கொடியை ஏற்றிவைத்து, சிற்றுரை ஆற்றினார். மாநாட்டைத் திறந்துவைக்க வேண்டிய அமைச்சர் பி.டி.ராஜன் வர தாமதமானதால், அவ்வேளையில் சேலம் சித்தையன் தலைமையில், பந்தலில் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. ஜஸ்டிஸ் கட்சியின் நன்மைகள் மற்றும் மாநாட்டுக்கு ஏற்பட்ட தொல்லைகள் பற்றி, சுமார் ஒரு மணி நேரம் பெரியார் உரையாற்றினார்.

பின்னர், தலைமையுரையாற்றிய சி.டி. நாயகம், “ஒவ்வொரு இன மக்களும் தகுந்த எண்ணிக்கைக்கு ஏற்ப வேலையில் சேர்க்கப்படுவதே நீதிக்கட்சியின் கொள்கை. இன நீதிக்காகப் பாடுபடுவோரை, நாட்டைக் காட்டிக்கொடுத்தவர்கள் என்கிறார்கள். இன வேற்றுமையை நுழைத்த பேராசைக் காரர்களே நம் நாட்டைக் காட்டிக்கொடுத்த துரோகிகள். கஜினி மகம்மதை சோமநாதபுரத்துக்கு அழைத்து வந்தவர்களும், மொகலாய அரசர் பாபரை நம் நாட்டிற்கு படையெடுத்து வர அழைத்தவர்களும், மைசூரில் பரம்பரையாக ஆண்டு வந்த அரச குடும்பத்தை ஒழித்து, புதிய போர் வீரனுக்கு முடிசூட்டியதும், இப்பொழுது ஆங்கில ஆட்சியை ஒழிக்க அமெரிக்க கூட்டுறவு நாட்டின் தலைவருக்கு மானங்கெட்ட கடிதம் எழுதியவர்களும் அவர்களே” என ஆவேசமாகப் பேசினார்.

சமபந்தி விருந்துக்குப் பிறகு, மதியம் 2.30 மணிக்கு பி.டி.ராஜன் மாநாட்டைத் திறந்து வைத்தார். சுமார் 2,000 பேருக்கு மேல் பந்தலில் கூடியிருந்தனர். அப்போது பேசிய அவர், இதுபோன்ற மாநாடுகளை ஒவ்வொரு தாலுகாவிலும் கிராமங்களிலும் கூட்ட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

வரவேற்புரையாற்றிய முத்துசாமிப் பிள்ளை,“மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்த காலம் முதற்கொண்டு இன்றுவரை ஜஸ்டிஸ் கட்சியார் அரசியல் நிர்வாகத்தில், பொது ஜனங்களுக்கும் சிறப்பாக பார்ப்பனரல்லாத மக்களுக்கும் எவ்வளவோ நன்மைகளைச் செய்தும், அவற்றின் பயனாக மிதமிஞ்சிய பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்தும் வந்த காரணத்தால், பொறாமை கொண்ட பார்ப்பனர்களும் பார்ப்பன தாசர்களான சில கோடாரிக்காம்புகளும் பதவி வேட்கையில் மோகம் கொண்டு தமது வகுப்பு நலத்தை பெருக்கிக்கொள்ள நமது கட்சியைப் பற்றி தப்பான அபிப்பிராயங்களைப் புகட்டி வருவது யாவரும் அறிந்ததே. பிரச்சாரமின்மையால் நமது கட்சிக்கு எப்போதுமிருந்த ஜனத்தொடர்பு இப்பொழுது சிதைந்துவிட்டது” என்று நீதிக்கட்சியின் அன்றைய எதார்த்த நிலைமையை எடுத்துக்கூறினார்.

பின்னர், பெரியார், பி.டி.ராஜன், சௌந்தர பாண்டியனார், சி.டி.நாயகம் ஆகியோருக்கு தேவேந்திர குல வேளாளர்கள் சங்கத்தின் சார்பில், வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன்பிறகு, மாலை 6 மணிக்கு அங்கிருந்த பாறை மீது, திறந்தவெளியில் பொதுக்கூட்டம் கூடியது. இக்கூட்டத்திற்கு சேலம் ஜெகதீசன் தலைமை தாங்கினார். பட்டுக்கோட்டை அழகிரி, பெரியார், பொன்னம்பலனார் ஆகியோர் ஜஸ்டிஸ் கட்சியின் பணிகள் குறித்தும், ஜஸ்டிஸ் கட்சிக்கும், ஜஸ்டிஸ் கட்சி மாநாடுகளுக்கும் ஏற்படுத்தப்பட்டு வந்த இடையூறுகளைப் பற்றியும் விரிவாகப் பேசினர்.

...கூட்டம் திரளும்

## ‘நான் முதல்வன்!’ தந்த முதல்வருக்கு நன்றி!

இந்திய ஆட்சிப்பணித் தேர்வின் முடிவுகள் வெளியாகி, தமிழ்நாட்டில் மிகச் சிறந்த அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. அதற்காக, ‘நான் முதல்வன்!’ தந்த முதல்வருக்கு நன்றி என முகநூலில் பதிவிட்டுள்ளார் எழுத்தாளர் யாழன் ஆதி. அவரது பதிவிலிருந்து…

“தேர்ச்சி பெற்றவர்கள், பெரும்பாலும் தமிழ்நாட்டு அரசு மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் ‘நான் முதல்வன்’! திட்டத்தின் மூலம் பயின்று தேர்ச்சிப் பெற்றவர்கள். அவர்களுடைய இந்தத் தேர்ச்சி என்பது, தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் அடிப்படையில் விளைந்தது என்பதுதான் மிகவும் முக்கியமானது.

வெறும் எண்ணிக்கையிலான தேர்ச்சியாக மட்டும் இது இல்லாமல், அவர்கள் பெற்றிருக்கிற அடைவுகள் என்பதையும், நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ‘நான் முதல்வன்’! திட்டத்தில் இணைந்து படிக்கும் மாணவர்களுக்குத் தேர்வு எழுதுவதற்கான பயிற்சி, அவர்களுக்கு ஆரோக்கியமான உணவு, தொடர்ந்து படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை, சிறந்த தங்கும் வசதி அவர்களுக்குத் தேவையான முன்மாதிரித் தேர்வுகள் ஆகிய அனைத்தும் ‘நான் முதல்வன்’! திடடத்தில் கொடுக்கப்படுகின்றன.

பல்வேறு அரசியல் சூழல்கள் தமிழ்நாட்டில் நிலவினாலும், தமிழ் மக்களினுடைய நலன் என்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இதை நாம் கருத்தில் கொள்வது என்பது, நம்முடைய அடிப்படை கவனமாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களும் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டு மாணவர்கள் போட்டித் தேர்வுகளில், தொடர்ந்து அதிக வெற்றிகளை ஈட்டி, அதிகாரங்களில் அமரக்கூடியவர்களாக மாற வேண்டும் என்பது, நம்முடைய எண்ணம். அதற்குத் துணை நிற்கும் தமிழ்நாடு அரசுக்கும் தமிழ்நாட்டு முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### மகள் பிறந்தநாளில், தலைவரிடம் வாழ்த்து!



எம்.இ.தேவநிதி

2003-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதி, எனது மகள் ரசிகாவின் 3-வது பிறந்த நாளன்று தலைவர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். எனது துணைவியார் சந்தானலட்சுமி, எனது மகன் கருணாநிதி ஆகியோருடன் சென்றிருந்தேன். அப்போது, தென்சென்னை கழக அன்றைய மாவட்டத் துணைச்செயலாளர் வசந்தி ஸ்டான்லி அவர்களும், ஆயிரம்விளக்கு கழக உடன்பிறப்பு ரமேஸ்வரி அவர்களும் உடன் இருந்தனர். அன்று நான் பெற்றது எனது வாழ்நாளில் மறக்கமுடியாத பெரும்பேறு. மிகவும் மகிழ்ச்சியான நாளாகவும் அது அமைந்தது.

– எம்.இ.தேவநிதி,
தலைமைக் கழகப் பேச்சாளர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

105


**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## முதல் பெண்கள்!

பாதி வரலாறுதான் நமக்குக் கடத்தப்படுகிறது. அது ஆண்மயப்பட்ட வரலாறாகவே இருக்கிறது, ஒரு மனிதன் உத்வேகமாகவும் லட்சியமாகவும் இருப்பதற்கு, ஆணே தகுதி வாய்ந்தவனாக முன்னிறுத்தப்படுகிறான். பெயருக்கு பின்னால் தந்தை பெயரைச் சேர்த்துக்கொள்வதில் தொடங்கி, தந்தை பிறந்த ஊரைச் சொந்த ஊராகச் சொல்வது வரை, அனைத்தும் ஆண்மையப்பட்டதாகவே இருக்கிறது.

பெண்கள் குறித்தும் அவர்களின் சாதனைகள் குறித்தும், சமீபகாலங்களில்தான் அதிகளவிலான வரலாற்று நூல்கள் எழுதப்பட்டு வருகின்றன. அவையும் மிகுந்த ஊக்கமளிக்கும் ஒன்றாகவே இருக்கின்றன. அந்த வகையில், கவிதா ராவ் எழுதி வெளியான *“Lady Doctors The Untold Stories of India’s First Women in Medicine”* நூல் கவனம் பெறுகிறது.

மேற்குலகில் பெண்கள், மருத்துவம் போன்ற துறைகளில் 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அனுமதி மறுக்கப்பட்டவர்களாகவே இருந்துள்ளார்கள். ஆண் வேடமிட்டு, மருத்துவம் பயின்ற நிகழ்வெல்லாம் நடந்துள்ளன, சிலர் மருத்துவம் படித்துவிட்டு, பயிற்சி செய்வதிலிருந்து புறக்கணிக்கப்பட்டும் இருக்கிறார்கள். பலருக்கு மருத்துவம் பயின்றதற்கான சான்றிதழ் வழங்கப்படவே இல்லை. மருத்துவத்துறையில் பெண்களின் நுழைவுக்குப் பிறகு தான் உலகம் முழுக்கவே பெண்கள் சுகாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது.



தொடக்க காலத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்தாலும் பின்னாட்களில் அவர்களின் சேவைக்கு, மேற்குலகில் ஏற்பு உருவாகியிருந்தது.

இந்த புத்தகம் இந்தியாவில் மருத்துவம் படித்துவிட்டு, பொது வாழ்க்கையில் குறிப்பிடத்தகுந்த தாக்கத்தை ஏற்படுத்திய 6 பெண் ஆளுமைகள் பற்றி பேசுகிறது, மருத்துவம் என்ற சொல், இங்கு நவீன அலோபதி மருத்துவத்தையே குறிக்கிறது.

ஆனந்திபாய் ஜோஷி, கடம்பினி கங்குலி, ருக்மாபாய் ராவத், ஹைமாபதி சென், முத்துலட்சுமி ரெட்டி, மேரி பூனென் லுகோஸ் ஆகியோர்தான் அந்த ஆறு பெண் மருத்துவர்கள். இதில் ருக்மாபாய் மற்றும் முத்துலட்சுமி அம்மையார் தவிர்த்து, அனைவரும் உயர்சாதியைச் சேர்ந்தவர்கள்.

இந்தியாவில் நடந்த முற்போக்கு இயக்க நடவடிக்கைகள் ஊடாக ஏற்பட்ட விழிப்புணர்வின் காரணமாகத்தான் பெண்கள் கல்வி பயில்வதில் ஆர்வம் உருவானது. அது முறையே மும்பை, கொல்கத்தா, சென்னை ஆகிய பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களிலும் திருவாங்கூர் சமஸ்தானத்திலும் இந்தச் சீர்திருத்த நடவடிக்கை, அதிகளவில் நடேந்தேறியது. இவர்களைத் தொடர்ந்து, பல பெண்கள் மருத்துவம் படிக்க முன்வந்தார்கள். ஆசிரியர், செவிலியர் போன்ற சேவைகளைத்தான் பெண்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றிருந்த முன்முடிவுகளை மாற்றுவதற்கு, முன்னோடிகளாக இந்த பெண்களே இருந்துள்ளார்கள்.

மருத்துவத்துறையில் இன்றிருப்பதைப் போல் ஒரே வேலை செய்யும் ஆண், பெண் என இருவருக்கும் ஒரே கூலி வழங்கப்படுவதில்லை. அன்றைய சூழலில் ஒரே சேவையை செய்யும் ஆண் பெண் இருவருக்குமான கூலி வேறுபாடு அதிகமாகவே இருந்துள்ளது.

இந்தியாவில் பெண் மருத்துவர்களின் வருகைக்குப் பின் தான் பெண்களின் சுகாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை, பல்வேறு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இன்றைக்கு தமிழ்நாடும் கேரளாவும் சுகாதாரத் துறையில் அடைந்திருக்கும் வளர்ச்சிக்கு, பெண்கள் கல்வி முக்கிய காரணமாகும்.

மருத்துவத் துறையில் அத்தகைய பெண்கள் கல்வி பெற, எத்தகைய இன்னல்களை எல்லாம் கடக்க வேண்டி இருந்தன என்பதை, இந்த நூல் நமக்குக் கடத்துகிறது.

...வாசிப்போம்.

## மலரும் நினைவுகள்

### மழையும் மாநாடும்!

1956-ஆம் ஆண்டு, திருச்சியில், மே மாதத்தில் நடைபெற்ற கழகத்தின் 2-வது மாநில மாநாட்டின் 2-வது நாளில், பெரும் மழை பொழிந்தது. மாநாட்டுப் பந்தல் முழுவதும் நீர் வெள்ளம். கைக்குழந்தைகளோடு வந்தவர்களை, அண்ணா முதல் அனைத்து தலை வர்களும் மேடையில் பாதுகாப்புடன் இருக்கச்செய்து, அதன் பிறகு கார்களை ஏற்பாடு செய்து பாதுகாப்புடன் தங்குமிடம் அனுப்பினர். இரவு 10 மணிக்கு மழை நின்றது. அந்தச் சூழ்நிலையிலும் மாநாடு தொடர்ந்தது. கலைஞரின் ‘மணிமகுடம்’ நாடகம் நடைபெறத் தவறவில்லை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131